**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**STC No. 15/2021**

| | | |
|---|---|---|
| L.W. P.W.: | | |
| D.W. : | | |
| Name : | **இராஜகோபாலன்** | Caste : |
| Father's Name : | நாராயணசாமி | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2022.

**முதல் விசாரணை:**

நான் அருந்தவம்புலம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்து உள்ள சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் கண்டு உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக 30.11.2020ஆம் தேதியிட்ட ரூ.5 லட்சத்திற்கான காசோலை (எண்.000159) - ம.சா.ஆ.1 ஆகவும், 03.12.2020ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வங்கியின் ரிட்டன் மெமோ ம.சா.ஆ.2 ஆகவும், 10.12.2020ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 11.12.2020ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆகவும், 15.12.2020ஆம் தேதியிட்ட மனுதாரர் அனுப்பிய பிற்சேர்க்கை அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.5 ஆகவும், எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.6 ஆகவும், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பிற்சேர்க்கை அறிவிப்பின் அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.7 ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்கின் வரவு செலவு கணக்கு விபரம் தலைஞாயிறு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் A/c.No.67272637576 நகல் தாக்கல் செய்யப்படுகிறது. மனுதாரர் ஸ்ரீ சாய் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மக்கள் தொடர்பு அலுவலராக பணிபுரிவதற்கான பள்ளியின் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அது ம.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் பள்ளியில் மக்கள் தொடர்பு அலுவலராக வேலை பார்த்து வருகிறேன். மாதம் ரூ.10,000/- சம்பளமாக பெற்று வருகிறேன். ரூ.10,000/-க்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு ஒரு மகன் உள்ளார். மாதம் உத்தேசமாக எவ்வளவு செலவாகும் என்றால் கூட்டுக்குடும்பம் என்பதால் அதிக செலவு ஆகும். எனக்கு சொந்தமாக எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 7 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயிகளுக்கான பயிர்க்காப்பீட்டின் இழப்பீட்டு தொகை வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். எனது பெயரில் வேறு எங்கும் போலீஸ் புகார் உள்ளதா என்றால் இல்லை. 2016ஆம் ஆண்டு எனது பள்ளியில் திண்டுக்கல்லை சேர்ந்த முதல்வர் அவர்களை பாலியல் தொல்லைகள் கொடுத்ததாக புகார் கொடுக்கப்பட்டு இருந்தது என்றால் இல்லை. அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டிருந்தது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் இல்லை. எனது புனைப்பெயர் பிரபாகரன் என்றால் மக்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும் என்றால் தெரியும். இராஜகோபாலன் என்றாலும் தெரியும். எனது புகாரில் எனது புனைப்பெயர் பிரபாகரன் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் நான் பள்ளியில் மக்கள் தொடர்பு அலுவலராக இருப்பதனால் நண்பர் என்ற வகையில் தெரியும். எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீடு எங்குள்ளது என்றால் வாய்மேட்டில் உள்ளது. எதிர்மனுதாரரின் முகவரி குறிப்பாக தெரியுமா என்றால் தெரியும். மேலக்காடு, வாய்மேடு என்று தெரியும். எதிர்மனுதாரருக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியாது. எதிரியின் வீட்டுக்கு எந்த பக்கம் வாசல் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியின் கடை வைத்துள்ள இடம் சொந்த இடமா, வாடகை இடமா என்றால் வாடகை இடம். கடையில் யாரும் பங்குதாரர்களாக உள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடை வைத்துள்ள இடம் யாருக்கு சொந்தமான இடம் என்று தெரியுமா என்றால் டாக்டர் ஆரிப் அவர்களுக்கு சொந்தமானது. G.A.Contractors என்ற நிறுவனத்தில் யார் பங்குதாரர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்து விஷ்ணுகுலத்தை சேர்ந்த யாதவர் வகுப்பை சேர்ந்தவர் என்றால்

சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகாரில் இந்து சிவமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. எதிர்மனுதாரர் முகவரியில் ஆர்.டி.குமார் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது மற்ற யாரையும் அது காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது புகார்மனுவில் எதிர்மனுதாரர் கீர்த்தி பேப்பர் ஸ்டோர் என்ற முகவரியில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் அங்கு வசித்து வரவில்லை என்றால் எதிர்மனுதாரர் அங்கு வசித்து வருகிறார். புகார் மனுவிலர் G.A.Contractors ஒப்பந்த தொழிலுக்காக கடனாக பணம் பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் 4 நாட்களுக்கு முன்னதாக கேட்டார். இந்த விபரத்தினை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் என்ன விசேஷம் என்றால் அன்று தீபாவளிக்காக எனது வீட்டிற்கு வந்திருந்தார். பண்டிகை காலத்தில் இந்துக்கள் பணம் பெறுவது என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பிலோ வங்கி கணக்கு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த புகார் குறித்து காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. 19.07.2021 அன்று காவல் நிலையத்தில் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் வாக்குமூலம் பெற்றார்கள், அதில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்னுடைய புகாரிலும், நிருபண ஆணையுறுதி ஆவணத்திலும் போலிசார் என்னை விசாரித்தது குறித்து தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் நான் விசாரணை செய்யப்படுவதற்காக என்னை வரச்சொல்லவில்லை. நிருபண பிரமாண வாக்குமூலத்தில் போலிசாரிடம் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் என் மீது புகார் கொடுக்கப்படவில்லை. G.A.Contractors என்ற நிறுவனத்தையோ அல்லது ஒப்பந்ததாரர்களையோ புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள காசோலையில் அது ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் G.A.Contractors என கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 எனது வங்கியில் கொடுக்கப்பட்ட ரிட்டன் மொமோ ஆனால் புகாரில் அது எதிர்மனுதாரர் வங்கியில் கொடுக்கப்பட்ட ரிட்டன் மொமோ என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ல் 02.12.2020 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நிறுவனத்திற்காக பணம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அந்த நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் நிறுவனத்திற்காக தான் என்று சொல்லிதான் என்னிடம் பணம் கேட்டார். நான் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறேன் என்னிடம் போதிய வருமானம் இல்லாதபட்சத்தில் ரூ.5 லட்சம் கடனாக கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மற்றும் எதிரியின் நிறுவனத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாதபட்சத்தில் எதிரிக்கு பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. G.A.Contractors நிறுவனம் எந்த முகவரியில் இயங்கி வருகிறது என்றால் தெரியாது. எதிரி AKH Agencies என்ற பெட்ரோல் பங்க் உரிமையாளர் அருள்மணிக்கு வழங்கிய காசோலையை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 13.05.2021 அன்று தலைஞாயிறு காவல் நிலையத்தில் மேற்படி அருள்மணி என்னிடமிருந்து காசோலையை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் அருள்மணியிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு எதிரிக்கு கொடுத்து காசோலையை எனது பெயரில் பெற்று தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிற்சேர்க்கை அறிவிப்பில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை விசாரிக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பணம் கொடுத்து உதவுவதற்கு போதுமான பொருளாதார வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு வங்கி கணக்குகள் உள்ளது. இரண்டு வங்கி கணக்கிலும் அதிக வரவு செலவுகள் செய்துள்ளேன். வங்கி கணக்குகளில் பணப்பரிவர்த்தனைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடிவும். எனக்கு போதுமான பொருளாதார வசதி இல்லை என்றாலும், எதிரியை பற்றியும், எதிரியின் நிறுவனத்தை பற்றியும் சரியாக தெரியாது என்றாலும், அருள்மணியிடமிருந்து காசோலையை தவறாக பெற்று பயன்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. G.A.Contractors நிறுவனத்தினுடைய காசோலை என்று தெரிந்தும் அந்த நிறுவனத்தினை தரப்பினராக சேர்க்காமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது குலத்தையும், எனது புனைப்பெயரையும் மறைத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததையும் மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையான நபர்களை சேர்த்து

தாக்கல் செய்யாததாலும், பொய்யான தரப்பினர்களை சேர்த்து தாக்கல் செய்துள்ளதாலும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.